**STARTING TIME 12.49 P.M**

**IN THE COURT OF THE SPECIAL SUBORDINATE JUDGE (LAOP CASES), ARAKKONAM.**

**O.S. No. 5/2025**

Deposition of **P.W.1** witnesses for Plaintiff Solemnly affirmed by Tmt. S. Malliga, Junior Assistant of this court, on 11.03.2025 in accordance with the provisions of Act 1 of 1873.

Name : முரளிதரன் Father's Name :

Address :

Calling : Age :

**2-ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை**

1. நான் தற்போது எந்த ஊரில் குடியிருக்கிறேன் என்றால், பனப்பாக்கம் கிராமத்தில் குடியிருக்கிறேன். தாவா சொத்துக்கள் வீடா அல்லது நிலமா என்றால், வீடும் உள்ளது மற்றும் நிலமும் உள்ளது. தாவா சொத்தில் உள்ளதாக சொல்லும் வீட்டின் கதவுஎண் என்னவென்றால், பழைய எண் 8 ஜி, புதிய எண் 22 ஆகும். அந்த வீட்டிற்கு வரி ரசீதுகள் உள்ளதா என்றால், உள்ளது.

2. தாவா சொத்துக்கள் ஆதியில் யாருக்கு பாத்தியப்பட்டது என்றால், எனது தாத்தாவின் தாத்தா மாணிக்க முதலியாருக்கு சொந்தமானது. மாணிக்க முதலியாருக்கு சொந்தமானது என சொல்லும் சொத்துக்களின் மொத்த விஸ்தீரணம் என்னவென்றால், அதுபற்றி தெரியாது. மாணிக்க முதலியாருக்கு எத்தனை மகன்கள் என்றால், 2 மகன்கள், அதில் ஒரு மகன் எனது தாத்தா

கண்ணன் என்கிற புண்ணிய கோட்டி ஆகும், மற்றொருவர் பெயர் நினைவில் இல்லை.

3. மாணிக்க முதலியார், எனது தாத்தாவிற்கு 12.11.1966 அன்று ஒரு செட்டில்மெண்ட் பத்திரம் எழுதி வைத்துள்ளார் என்றால், சரிதான். அந்த ஆவணம் வா.சா.ஆ–1 என குறியீடு செய்யப்பட்டுள்ளது என்றால், சரிதான். அந்த ஆவணம் தான் இவ்வழக்கில் எங்களுக்கு உண்டான உரிமையைக் குறித்து சொல்லியுள்ளது. அந்த ஆவணத்தின் அசல் ஆவணம் யாரிடத்தில் உள்ளது என்றால், 2–ம் பிரதிவாதியிடம் உள்ளது.

4. வா.சா.ஆ–1 ஆவணத்தின் மூலம் எனது தாத்தா, அப்பா மற்றும் என் அப்பாவின் உடன் பிறந்தவர்களுக்கு 35 செண்ட் சொத்தைப் பொறுத்து எழுதி கொடுக்கப்பட்டுள்ளது என்றால், சரிதான். அந்த ஆவணம் எழுதிய சமயத்தில் அந்த ஆவணத்தில் உள்ள சொத்தின் சர்வே எண் 88 என்றால், சரிதான். அந்த 35 செண்ட் சொத்தைத்தவிர எனது தாத்தாவிற்கு வேறு சொத்து எதுவும் கொடுக்கப்பட்டதா என்றால், அதுபற்றி எனக்கு தெரியாது.

5. அந்த 35 செண்ட் சொத்தானது எனது தகப்பனாருக்கும், 1, 2 பிரதிவாதிகளுக்கு மட்டும் தான் பாத்தியப்பட்டது என்றால், சரிதான். அந்த 35 செண்டின் பழைய சர்வே எண் 88 என்றால், சரிதான்.

6. அந்த 35 செண்ட் சொத்தில் 10 செண்ட் சொத்தை யார், யாருக்கு விற்பனை செய்யப்பட்டது என்றால், எனது தகப்பனார் மற்றும் அவருடன் பிறந்தவர்கள் சிறுவயதாக இருந்தபோது, பெருமாள் என்பவருக்கு எனது தாத்தா அந்த 10 செண்ட் சொத்தை விற்பனை செய்துள்ளார். அந்த கிரைய பத்திரம் வா.சா.ஆ–2 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது என்றால், சரிதான். அந்த ஆவணத்தில் எனது தகப்பனாரும், 1, 2 பிரதிவாதிகளும் சேர்ந்து தான் எழுதி கொடுத்ததாக உள்ளது என்றால், சரியல்ல, அந்த கிரையத்தின்போது எனது தகப்பனார் சிறு வயதாக இருந்ததால், எனது தாத்தா தான் எழுதி கொடுத்தார்.

7. வா.சா.ஆ–1 செட்டில்மெண்ட் பத்திரப்படி சொத்தை விற்பனை செய்யும் அதிகாரம் எனது தாத்தாவிற்கு இல்லை என்றால், சரிதான். ஆனால், என் தாத்தா தான் வா.சா.ஆ–2 கிரைய பத்திரத்தை எழுதி கொடுத்துள்ளார். நான் தாக்கல் செய்துள்ள வா.சா.ஆ–2 கிரைய பத்திரத்திற்கு முரணாக நான் சாட்சியம் அளிக்கிறேன் என்றால், சரியல்ல. எனது தாத்தாவிற்கு கிரையம் செய்யும் உரிமை இல்லை என சொல்லும் நிலையில், வா.சா.ஆ–2 கிரையம் செல்லாது என வழக்கு எதுவும் தாக்கல் செய்துள்ளேனா என்றால், இல்லை.

2–ம் **பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்கா வேண்டுகோளின் பேரில் ஒத்திவைக்கப்படுகிறது.**

**ENDING TIME 1.11.P.M.**

G YUVARAJ

Digitally signed by G YUVARAJ
Date: 2025.03.11 16:33:08 +0530